தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

வெள்ளிக்கிழமை, 1980 ஆகஸ்ட், 1.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

தேரான் தெளிவும் தெளிந்தான்கண் ஐயுறவும்
தீரா இடும்பை தரும்.

ஆராய்ந்து பார்க்காது ஒருவன் மீது நம்பிக்கை வைத்தலும்; ஆராய்ந்து தெளிந்த ஒருவனிடம் சந்தேகம் கொள்வதும் என்றும் நீங்காத துன்பத்தைக் கொடுக்கும்.

1. வினாக்கள்— விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள் 88 முதல் 93 வரை பின்னர் எடுத்துக்கொள்ளப் பெறும்.

முதுகுளத்தூர் தாலுக்காவில் பாசன வசதி.

*வினா எண். 94— திரு. எஸ். ஆண்டித்தேவர்: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

முதுகுளத்தூர் தாலுக்காவிற்கு நீர்ப்பாசன வசதியளிக்கும் வகையில் கிருதுமால் நதி, நாராயணக்காவேரி, மலட்டாறு, ஆகிய திட்டங்களை நிறைவேற்ற அரசு இதுவரை எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை?

1980 ஆகஸ்ட் 1]

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : முதுகுளத்தூர் தாலுக்காவிற்கு நீர்ப்பாசன வசதியளிக்கும் வகையில் கீழ்க்கண்ட நடவடிக்கைகளை அரசு இதுவரையில் எடுத்துள்ளது:—

(1) வைகையாற்றின் வெள்ள பெருக்கு நீரை அருகிலுள்ள கிருதுமால் மற்றும் குண்டாறு வடிநிலத்திற்கு திருப்பிவிடும் திட்டத்திற்கு அரசின் ஒப்புதல் அளிக்கப்பட்டு வேலைகள் துவங்கப்பட்டுள்ளன.

(2) நாராயணக்காவேரியின் மூலம், பாசனம் பெறும் குளங்களுக்கு பாசன வசதி அளிப்பதற்காக குண்டாற்றின் குறுக்கே ஒரு அணை கட்டி முடிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

(3) மலட்டாற்றின் குறுக்கே செங்கப்பட்டி கிராமம் அருகே ஒரு அணைக்கட்டு அமைக்கும் திட்டம் தலைமைப் பொறியாளரின் ஆய்வில் உள்ளது.

திரு. உ. சுப்பிரமணியன் : பேரவைத் தலைவர் அவர்களே, நாராயணக்காவேரி, மலட்டாறு, கிருதமால் நதி ஆகியவற்றிற்கான வேலைகள் துவங்கப்பட்டு இருக்கிறது என்பதைக் கேட்க மகிழ்ச்சி. கிருதமால் திட்டத்தின் மூலமும், நாராயணக்காவேரி திட்டத்தின் மூலமும் வைகையை ஒட்டிய பகுதிகள்—முதுகுளத்தூர் வரையில் உள்ள இடைப்பட்ட பகுதிகள்—ஆகியவற்றிற்கும் பாசன வசதி கொடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, எந்தெந்தப் பகுதிகள் என்று குறிப்பிடுவார்களானால், சரியாக விவரம் சொல்ல வசதியாக இருக்கும். மூலக்கேள்வி முதுகுளத்தூர் பற்றி இருந்ததால், அதற்கான பதில் சொல்லி இருக்கிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த முதுகுளத்தூர் தாலுக்கா கிழக்கு இராமநாதபுரத்தில் மிகவும் பின்தங்கிய பகுதி. இந்த மூன்று திட்டங்களால் பயன் அடையும் மொத்த நிலங்களின் ஏக்கர் எவ்வளவு? இந்த 3 திட்டங்களும் ஒட்டுமொத்தமாக எப்போது நிறைவேற்றி முடிக்கப்படும் என்று கூற முடியுமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, முதலாவது பகுதியாக வைகை ஆற்றின் வெள்ளப் பெருக்கு நீரை கிருதமால் மற்றும் குண்டாறு பாசனத்திற்குத் திருப்பி விடும் அந்தப் பணி துவக்கப்பட்டுள்ளது. அதன் மூலம் 13,360 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி செய்து கொடுக்க வாய்ப்பு இருக்கிறது. நாராயணக்காவேரி கால்வாய் திட்டத்திற்காக குண்டாற்றில் ஒரு அணை கட்டி முடிக்கப்பட்டு இருக்கிறது. அதன் மூலம் 493.12 ஏக்கர் நிலங்களின் பாசனப் பற்றாக்

குறையைப் போக்க முடியும். 3,690.67 ஏக்கர் நிலங்களுக்கு பாசன வசதி உறுதி பெறுகிறது. 3-வது திட்டமாக உள்ள மலட்டாறு திட்டத்தின் மூலமாக 4,341 ஏக்கர் நிலங்களுக்கு பாசன உறுதி அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

திரு. என். எஸ். வி. சித்தன் : எப்போது அது நிறைவேற்றப்படும்?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: கிருதமால் குண்டாறு பாசன வசதி திட்டத்திற்காக ரூ. 95 லட்சம் என்கிற அளவிற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அந்தத் திட்டத்தை நிறைவேற்ற அரசு ஒப்புதல் அளித்து இருக்கிறது.

இரண்டாவது திட்டமான, நாராயணக்காவேரி கால்வாய் பாசன திட்டத்திற்காக சிறப்பு சிறுபாசன திட்டத்தின்கீழ் ஒரு அணை குண்டாற்றல் கட்டப்பட்டு, அது இப்போது செயல்படத் தொடங்கியுள்ளது.

மூன்றாவது திட்டமான மலட்டாறைப் பொறுத்தவரையில், அது தற்போது தலைமைப் பொறியாளரின் ஆய்வில் இருக்கிறது, அது வந்தவுடன் அதை அரசு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளும்.

திரு. ப. நெடுமாறன் : தலைவரவர்களே, மதுரை நகரில் வைகை ஆற்றிலிருந்து கிருதமால் நதி பிரிகிறது. அந்த இடத்தில் ஏராளமான வீடுகள் கட்டப்பட்டு, முகப்பு அடைபட்டிருக்கிறது. கிருதமால் நதித் திட்டம் மதுரை தாலுகாவில் சில பகுதிகள், அருப்புக்கோட்டை மற்றும் முதுகுளத்தூர் தாலுக்காக்களுக்கு பலன் அளிக்கும் திட்டம். நீண்டகாலமாக அந்தத் திட்டம் அப்படியே இருக்கிறது. கிருதமால் நதித்திட்ம் ஒன்று தனியா இருக்கிறது. அந்தத் திட்டத்தை அரசு என்ன செய்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட ஒரு பகுதிக்கு விடை இதிலேயே இருக்கிறது. மதுரை நகரை ஒட்டியுள்ள பகுதிகளில் வைகையிலே வெள்ளம் கரைபுரண்டு ஓடும்போது தாழ்வான பகுதிகள் நீரில் மூழ்கிவிடுகின்றன. சென்ற ஆண்டில் கூட இதைப்பார்த்தோம். அதை மனதிலே வைத்துதான் இந்த கிருதமால் நதித்திட்டத்தை சுமார் 95 இலட்சம் ரூபாய் செலவில் செயல்படுத்துகிறோம். இன்னொரு திட்டம் அங்கே உபரியாக வரக்கூடிய நீரை பக்கத்திலே ஒரு நீர்த்தேக்கத்தை ஏற்படுத்தி, அங்கே தேக்கி வைத்து பாசனத்திற்கு பயன்படுத்தும் திட்டம். அது தனியாக ஆய்வில் இருக்கிறது.